**ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், உப்பாரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி. S.தமிழ்செல்வி செல்வகுமார்**
**மனை வரைபட அனுமதி எண். 14/2024, நாள். 07..02.2024**
**மன்றத்தீர்மானம் எண். 07./2024, நாள்.07.02.2024**

பொருள் : மனைப்பிரிவு வரைபட அனுமதி - கிருஷ்ணகிரி மாவட்டம் - ஊத்தங்கரை வட்டம் - ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், உப்பாரப்பட்டி ஊராட்சி - உப்பாரப்பட்டி வருவாய் கிராமம், சர்வே எண்.29/3B1A1A (பழைய சர்வே எண்.29/3B1A) மற்றும் சர்வே எண்.33/5 இவைகளில் ஹெக்டர் 1.80.02 (அ) 18002.00 சதுரமீட்டர் பரப்பளவில் மயிலம் சிட்டி அமைக்கப்பட்ட மனைபிரிவு உரிமையாளர் திரு.K.C.மோகன், காவேரிப்பட்டணம் என்பவரின் மனைப்பிரிவு மனைகள் ஒப்புதல் அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசானை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
2. அரசானை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
3. அரசானை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வடிகால்துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.18, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.31.01.2020.
4. அரசானை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்.23.09.2020.
5. அரசானை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்.09.12.2020.
6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் இணையதள விண்ணப்பம் எண்.P3D5VDPO/2024/TCP, நாள்.01.02.2024.
7. தான ஆவண எண்.541/2024, 655/2024.
8. திரு.K.C.மோகன் அவர்களின் விண்ணப்பம்.

உப்பாரப்பட்டி ஊராட்சி மன்றம் ஊத்தங்கரை ஒன்றியம்-635 207 தேதி 4/3/2024

உத்திரவு

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், உப்பாரப்பட்டி ஊராட்சி, உப்பாரப்பட்டி வருவாய் கிராமம், சர்வே எண்.29/3B1A1A (பழைய சர்வே எண்.29/3B1A) மற்றும் சர்வே எண்.33/5 இவைகளில் ஹெக்டர் 1.80.02 (அ) 18002.00 சதுரமீட்டர் பரப்பளவில் மயிலம் சிட்டி அமைக்கப்பட்ட மனைபிரிவு ஒப்புதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் வரைபடம் ஒப்புதல் அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனை

1. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறே மனைகள் அமைய வேண்டும். எனவே மாறுதல்கள் செய்யவோ அளவீடுகள் மாற்றம் செய்யவோ கூடாது. தவறும்பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தங்களின் மனைப்பிரிவு வரைபடத்தின் அனுமதி இரத்து செய்யப்படும்.

2. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கழிவு நீருக்கென தனியே உறிஞ்சுக்குழிகள் (Soak pit) தனியே அமைக்கப்பட்டு தனியாக வடிகால் கட்டிவிடப்பட வேண்டும்.



Scanned with OKEN Scanner

3. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டிடம் கட்டும் போது சாதாரனமான முறையில் செப்டிக் டேங்க் வசதிகள் ஊராட்சியின் கழிவு நீர் வடிகாலுடன் நேரடியாக இணைக்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் தேவையான அளவிற்கு வடிகால் வசதிகள் தரமான கட்டுமானம் கொண்டு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஊராட்சி அல்லது அரசு புறம்போக்கு நிலங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. அவ்வாறு ஏதாவது ஊராட்சி நிர்வாகத்திற்கு தெரியும்பட்சத்தில் தங்களின் மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி ரத்து செய்யப்படுவதுடன் தங்களின் மீது அரசு விதி முறைப்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டமைப்புக்கேற்ப மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்படவேண்டும்.

7. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் தெரு மின் விளக்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

8. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் குடிநீருக்கென தனியாக ஆழ்துளை கிணறு அமைத்து அனைத்து மனைகளுக்கும் குடிநீர் இணைப்பு தரவேண்டும்.

9. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் சுற்றி பலன் தரும் மரங்கள் மற்றும் செடிகள் அதிக அளவில் வைக்கப்பட வேண்டும்

10. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது உபயோக இடங்கள் மற்றும் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்கள் யாவும் தலைவர் ஊத்தங்கரை வருவாய் கிராமம், உப்பாரபட்டி ஊராட்சி என்றும் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களின் உட்பிரிவு (Sub-Division) செய்து தரப்பட வேண்டும்.

11. துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் இணையதள விண்ணப்பம் எண்.P3D5VDPO/2024/TCP, நாள்.01.02.2024. நகர் ஊரமைப்பு ஒப்புதல் எண். L.P./D.D.T.C.P. (K.D) (SWP) No. 14/2024-ல் சிறப்பு நிபந்தனை வ.எண்.5-ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு சூராய்வு கட்டணம் ரூ.84,000/- மற்றும் இதர கட்டணங்கள் ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது ரசீது பெறப்பட்டுள்ளது.

12. அசல் தான ஆவணம் ஊராட்சி பொறுப்பில் பெறப்பட்டுள்ளது.

S. Tamilselvi
தலைவர்
உப்பாரப்பட்டி ஊராட்சி.
ஊத்தங்கரை ஒன்றியம்.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
ஊராட்சி மன்ற தலைவர்,
உப்பாரப்பட்டி ஊராட்சி.
ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு :
மனுதாரருக்கான வரைப்படம்

பெறுநர்
திரு.K.C.மோகன்,
தேசிசெட்டித் தெரு,
காவேரிப்பட்டணம்.
கிருஷ்ணகிரி வட்டம் & மாவட்டம்.

நகல் :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), கிருஷ்ணகிரி மாவட்டம் தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ). ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம்.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஊத்தங்கரை.

Scanned with OKEN Scanner